DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : மருதுபாண்டிய துரைமுருகன் | Father/Husband Name : செல்லச்சாமி |
| Age : 42 | Village : எதிர்கோட்டை |
| Taluk : | Calling : தலைமை காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Jan 20, 2026 12:12 PM

(A1 charge abated. A2, A4 present. A3 not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் தற்போது ஏழாயிரம்பண்ணை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியில் இருந்த போது 30.01.2017 ம் தேதி காலை சுமார் 09.00 மணியளவில் வெம்பக்கோட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் முத்துராஜ், நான், சிறப்பு உதவி ஆய்வாளர் பெருமாள் சாமி, தலைமை காவலர் 669 நடராஜன் ஆகியோர் வெம்பக்கோட்டை காவல் நிலைய சரகம் சேதுராமலிங்கபுரம் தெற்கேயுள்ள வைப்பாற்று பகுதியில் ரோந்து செய்த போது ஆற்றின் தெற்கு கரை ஓரம் TN 57 J 8726 என்ற பதிவெண் கொண்ட TATA Pickup வேனில் கீழதாயில்பட்டியை சார்ந்த வள்ளி ராஜ் மகன் செல்வமணி மற்றும் பெயர், முகவரி தெரியாத 3 நபர்களுடன் மண்வெட்டியால் இரும்பு தட்டில் ஆற்றிலிருந்து மணல் அள்ளி போட்டு கொண்டு இருந்தார்கள்.

2. போலீஸ் பார்ட்டியாகிய எங்களை பார்க்கவும், மணல் அள்ளி போட்டுக்கொண்டிருந்த அவர்கள், 3 மண்வெட்டி, 3 தட்டுகள் ஆகியவற்றை அப்படியே போட்டுவிட்டு ஓடி தப்பிவிட்டார்கள். அவர்கள் ஆற்றில் மணல் அள்ளிக்கொண்டிருந்த இடத்தில் பார்த்த போது மேற்சொன்ன வாகனத்தில் திருட்டுத்தனமாக ½ யூனிட் ஆற்று மணல் இருந்தது. அவர்கள் போட்டு சென்ற 3 மண்வெட்டி மற்றும் 3 தட்டுகள் இருந்தது. மண்வெட்டி கைப்பிடி வகை என்ன என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை.

3. அவர்கள் திருட்டுதனமாக அள்ளிய மணலின் மதிப்பு சுமார் ரூ.1000/- இருக்கும். அரசு அனுமதியில்லாமல் திருட்டுத்தனமாக மணல் அள்ளிய லோடு வேன், 3 மண்வெட்டி, 3 தட்டுகள் ஆகியவற்றை உதவி ஆய்வாளர் முத்துராஜ் கைப்பற்றி தயாரிக்கலான அத்தாட்சியில் கையொப்பம் செய்ய தனி நபர்கள் யாரும் இல்லாததால் போலீஸ் பார்ட்டிகளாகிய நாங்களே கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சியில் நானும், தலைமை காவலர் நடரஜனும் சாட்சி கையொப்பம் செய்தோம். அத்தாட்சியில் உள்ள 3 வது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும்.**(அத்தாட்சி அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள மணலுடன் கூடிய TATA Pickup வாகனம், 3 மண்வெட்டி மற்றும் 3 தட்டுகள் ஆகியவை சம்பவ இடத்தில் வைத்து கைப்பற்றப்பட்டவை ஆகும். **(புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 3 மண்வெட்டிகள் அ.சா.பொ.1 ஆகவும், 3 இரும்பு தட்டுகள் அ.சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

4. சம்பவ இடத்தில் வைத்து கைப்பற்றப்பட்ட பொருட்களை காவல் நிலையத்திற்கு சென்று வழக்கு பதிவு செய்ய உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். சம்பவத்தில் ஈடுபட்ட செல்வமணி என்பவர் மீது காவல் நிலையத்தில் வழக்குகள் இருந்ததால் அவரை மட்டும் எனக்கு தெரியும். மற்ற 3 நபர்களை தூரத்தில் வைத்து பார்த்ததால் அவர்களின் அடையாளம் எனக்கு சரியாக தெரியவில்லை.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

5. என்னை காவல் ஆய்வாளர் எந்த தேதியில், எத்தனை மணிக்கு, எங்கு வைத்து விசாரணை செய்தார் என்றால் காவல் நிலையத்தில் வைத்து வழக்கு சம்பவம் நடைபெற்ற தேதியிலேயே விசாரணை செய்தார், நேரம் எனக்கு ஞாபகம் இல்லை. என்னை விசாரணை செய்யும் போது காவல் ஆய்வாளர் வேறு யாரையெல்லாம் விசாரணை செய்தார் என்றால் தலைமை காவலர் நடராஜன் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் பெருமாள் சாமி ஆகியோர்களை விசாரித்தார். வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறும் இடம் வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் இருந்து எத்தனை கிலோமீட்டர் தொலைவில் மற்றும் எந்த திசையில் இருக்கிறது என்றால் காவல் நிலையத்தில் இருந்து கிழக்கு திசையில் சுமார் 12 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும். சேதுராமலிங்கபுரத்திலிருந்து சம்பவம் நடைபெற்றதாக கூறப்படும் ஆற்றுப்பகுதி எவ்வளவு தூரத்தில் இருக்கும் என்றால் சுமார் 500 மீட்டர் தொலைவில் இருக்கும்.

6. அத்தாட்சியை காவல் ஆய்வாளர் தான் தயார் செய்தார் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நாங்கள் ரோந்து பணிக்கு சென்றபோது என்ன என்ன உபகரணங்களை எடுத்துச் சென்றோம் என்றால் உபகரணங்கள் எதுவும் தனியாக எடுத்துச் செல்லவில்லை. நாங்கள் காவல் ஆய்வாளரின் ஜிபில் தான் ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் இல்லை. நாங்கள் நான்கு சக்கர வாகனத்தில் தான் ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் சரியல்ல, நாங்கள் நான்கு பேரும் தனித்தனி இருசக்கர வாகனத்தில் சென்றோம், நான் என்னுடைய இருசக்கர வாகனத்தில் சென்றேன். நாங்கள் நான்கு பேரும் தனித்தனியே இருசக்கர வாகனத்தில் சென்றோம் என்ற விபரத்தை காவல் ஆய்வாளர் என்னை விசாரித்த போது நான் கூறினேனா என்றால் அவருக்கு அந்த விபரம் தெரியும் என்பதால் நான் அதை கூறவில்லை.

7. நாங்கள் காவல் நிலையத்தில் இருந்து தனித்தனியாக புறப்பட்டோமா ஒன்றாக புறப்பட்டோமா என்றால் தாயில்பட்டி வரை ஒன்றாக சென்று, அங்கிருந்து ஆற்று பகுதிக்குள் செல்ல சுமார் ஐந்து பாதைகள் இருப்பதால் நாங்கள் ஒவ்வொருவரும் தனித்தனி பாதை வழியாக சென்றோம். என்னுடன் வந்த மற்ற மூன்று நபர்களும் எந்தெந்த திசை வழியாக சென்றார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எங்களுடைய பாக்கெட் டைரி மற்றும் காவல் நிலைய பொது நாட்குறிப்பு பதிவேடு ஆகியவற்றை பார்வையிட்டால் நாங்கள் சம்பவ தேதியில் ரோந்து பணிக்கு சென்றோமா என்பது தெரியும் என்றால் சரிதான்.

8. உயர் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் கூறுவது போல் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல. நான் உண்மையிலேயே ரோந்து பணிக்கு சென்று இருந்தால் சம்பவ இடத்தில் இருந்ததாக கூறப்படும் மண்வெட்டியின் கைப்பிடி மர

கைப்பிடியா அல்லது இரும்பு கைப்பிடியா என்பது எனக்கு தெரிந்திருக்கும் என்றாலும், நான் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்பதால் தான் அந்த விபரம் எனக்கு தெரியவில்லை என்றாலும் சரியல்ல. நான் அத்தாட்ச்சியில் காவல் நிலையத்தில் வைத்து என்னுடைய உயர் அதிகாரிகளின் வேண்டுகோளின் படி கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல, அத்தாட்ச்சி தயார் செய்த சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். அத்தாட்சி சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யவில்லை என்பதால் தான் அதில் கைப்பற்றப்பட்டதாக கூறும் மண்வெட்டி மர கைப்பிடியா அல்லது இரும்பு கைப்பிடியா என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல.

9. மணலில் மதிப்பை முடிவு செய்ய நான் தனியாக படிப்பு எதுவும் படிக்கவில்லை என்றால் இல்லை. மணலின் மதிப்பு எவ்வளவு என்பதை பொதுப்பணித் துறை பொறியாளர் தான் முடிவு செய்ய முடியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மண்வெட்டிகள் மற்றும் இரும்பு தட்டுகள் எதிரிகளிடம் இருந்து கைப்பற்றவில்லை என்றாலும், அவைகள் எளிதாக கடையில் கிடைக்கக்கூடியது என்பதால் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக கூறும் டாட்டா பிக்கப் வாகனத்தில் எங்களுடைய காவல் நிலையத்தில் இருந்த இருப்பு மணலை வைத்து நிரப்பி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

10. இந்த வழக்கு உயர் அதிகாரிகளின் நிர்பந்தத்தின் பெயரில் பொய்யாக பதிவு செய்யப்பட்டது என்பதால், அவர்களின் வேண்டுகோளின் படி நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பொருட்கள் எதுவும் சம்பவ இடத்தில் வைத்து கைப்பற்றப்படவில்லை என்றாலும், அத்தாட்சி காவல் நிலையத்தில் வைத்துதான் தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Jan 20, 2026 12:44 PM

Judicial Magistrate 2, Sattur